# கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 5 (சிம்சோன்)



**எபிரெயர் 11 ஆம்** அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள விசுவாச வீரர்கள் பட்டியலில், சிம்சோன் பெயரும் காணப்படுகின்றது **(எபிரெயர் 11:32)**. இவ்வாறாக அவருடைய பெயர் விசுவாச வீரர்கள் பட்டியலில் காணப்பட்டாலும், நியாயாதிபதிகளின் புத்தகத்தில் அவருடைய பிறப்பின் அறிவிப்பு முதல், அவர் வாழ்க்கையின் பல்வேறு தருணங்களில் அவருக்கு கொடுக்கப்பட்ட கிருபையை அவர் சரியாக பயன்படுத்தி இருப்பாரானால், உண்மையில் அவர் தேவனுக்காக எவ்வளவோ பயன்பட்டிருக்க முடியும். ஆனால் அவர் தனக்கு கொடுக்கப்பட்ட கிருபையை போக்கடித்தபடியால், அவருடைய வாழ்க்கை பரிதாபகரமாய் முடிந்தது. எல்லாரும் கண்டு அஞ்சி நடுங்கத்தக்கதாய், தேவனுடைய வல்லமை வெளிப்படையாய் அவருடைய வாழ்வில் காணப்பட்ட பொழுதும், எந்த சரீரத்தின் பெலன், தேவ ஆவியினால் நிரப்பப்பட்டதோ, அதே சரீரத்தை பாவத்திற்கு ஒப்புக்கொடுத்து. தன் ஆவி, ஆத்துமா, மற்றும் சரீரம் ஆகிய மூன்றையும் கறைப்படுத்திக் கொண்டார். அவருடைய வாழ்க்கை நம் எல்லோருக்கும் ஒரு எச்சரிப்பின் செய்தியாய் காணப்படுகிறது. அதை குறித்து இத்தியானத்தில் நாம் தியானிப்போமாக.

புதிய ஏற்பாட்டில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு எப்படி தேவதூதனால், கன்னி மரியாளுக்கும், யோசேப்பிற்கும் முன்னறிவிக்கப்பட்டதோ, பிள்ளையைப் பற்றிய காரியங்கள் எப்படி தீர்க்கதரிசனமாய் அவர்களுக்கு முன்னறிவிக்கப்பட்டதோ, அவ்வாறாக **நியாயாதிபதிகள் 13 ஆம்** அதிகாரத்தில் சிம்சோனின் தாயாருக்கும், அவருடைய தகப்பனார் மனோவாவிற்கும், ஒன்றிற்கு இரண்டு முறை, தேவதூதனானவர் தோன்றி, பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும், அதற்கு பெற்றோராகிய அவர்கள் எப்படிப்பட்ட ஒழுக்க நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்பதையும், பிள்ளையை குறித்த தேவத்திட்டமான தேவனுக்கென்று நசரேயனாய் இருப்பதைப் பற்றியும், இஸ்ரவேலை ஒடுக்கும் பெலிஸ்தரின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி ரட்சிக்க போவதை பற்றியும் கூறப்பட்டது (**நியாயாதிபதிகள்** 13:5). இவ்வளவு தெளிவாக, விரிவாக அவருடைய பிறப்பு கூறப்பட்டிருப்பதும், அதை அறிவிக்க வந்த தேவனுடைய தூதனானவர் தம் நாமம் அதிசயம் என்று கூறியதும், அவருடைய பிறப்பை பரலோகம் எவ்வளவு ஆவலாய் உற்று நோக்கியது என்பதை விளங்கச் செய்யும்.

**நியாயாதிபதிகள்** 13:24,25 வசனங்களில் **“பின்பு அந்த ஸ்திரீ ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சிம்சோன் என்று பேரிட்டாள்; அந்தப் பிள்ளை வளர்ந்தது; கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். அவன் சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவிலுள்ள தாணின் பாளயத்தில் இருக்கையில் கர்த்தருடைய ஆவியானவர் அவனை ஏவத்துவக்கினார்.“** ஆம் கர்த்தர் அவரை ஆசீர்வதித்தார், மேலும் கர்த்தருடைய ஆவியானவர் தேவத்திட்டத்தை செயல்படுத்தும்படியாய் அவரை ஏவத்துவக்கினார். ஆனால் அவரோ விஷேச விதமாய் தன்னுள் விளங்கும் தேவ மகிமையை உணராமல், சாதாரண வாலிபனை போல சரீர இச்சைக்கு உட்பட்டு பெண்களின் பின்னே செல்ல ஆரம்பித்தார். அடுத்த அதிகாரத்திலேயே, அவர் வாலிப வயதை அடைந்த பொழுது, விருத்தசேதனம் இல்லாத, தன் ஜனத்தை ஒடுக்கும் பெலிஸ்தியரின் குமாரத்திகளில், ஒருவரை விவாகம் பண்ண விரும்பினார், அவர் பெற்றோர், அதை அவருக்கு எடுத்துக்கூறியும் , அவர் அவளை விவாகம் பண்ணக்கூறிய ஒரே காரணம், அவள் என் கண்ணுக்கு பிரியமானவள் என்பதாகும் (**நியாயாதிபதிகள்** 14:3). ஆனால் இதையம் ஆண்டவர் தம் சித்தம் நிறைவேற அனுமதித்தார் என்பதை

**நியாயாதிபதிகள் 14:4** கூறுகிறது **“அவன் பெலிஸ்தரிடத்தில் குற்றம் பிடிக்க முகாந்தரம் உண்டாகும்படி, இது கர்த்தரின் செயல் என்று அவன் தாயும் தகப்பனும் அறியாதிருந்தார்கள்; அக்காலத்திலே பெலிஸ்தர் இஸ்ரவேலை ஆண்டார்கள்.“**. **நியாயாதிபதிகள் 14:5,6** வசனங்களில் **“அப்படியே சிம்சோனும் அவன் தாயும் தகப்பனும் திம்னாத்துக்குப் போகப் புறப்பட்டார்கள்; அவர்கள் திம்னாத் ஊர் திராட்சத்தோட்டங்கள்மட்டும் வந்தபோது, இதோ, கெர்ச்சிக்கிற பாலசிங்கம் ஒன்று அவனுக்கு எதிராக வந்தது. அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், அதை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப்போடுகிறதுபோல் கிழித்துப்போட்டான்; ஆனாலும் தான் செய்ததை அவன் தன் தாய் தகப்பனுக்கு அறிவிக்கவில்லை.“** இங்கு கர்த்தருடைய ஆவி அவர் மேல் பலமாய் இறங்கிய பொழுது அவருடைய சரீரத்தில் அதன் தாக்கம் காணப்படுகிறது.

ஆனால் இப்படிப்பட்ட பெலத்தைப் பற்றி, குறிப்பாக தன் தாய் தகப்பனுக்கு கூட அவர் அறிவிக்கவில்லை. அவர் விருப்பப்படி காரியங்கள் நடந்தேறிய பொழுதும், திரை மறைவில் தேவத்திட்டமே அவர் வாழ்க்கையில் செயல்பட்டு கொண்டிருந்தது. அதே நேரத்தில் **நியாயாதிபதிகள் 14:17 இல் “விருந்துண்கிற ஏழுநாளும் அவள் அவன் முன்பாக அழுதுகொண்டே இருந்தாள்; ஏழாம்நாளிலே அவள் அவனை அலட்டிக்கொண்டிருந்தபடியால், அதை அவளுக்கு விடுவித்தான்; அப்பொழுது அவள் தன் ஜனங்களுக்கு அந்த விடுகதையை விடுவித்தாள். “**. இங்கு அவரிடம் இருந்த மற்றொரு பலவீனத்தை நாம் காண்கிறோம். முதலாவது கண்களின் இச்சைக்கு முதலிடம் கொடுத்து அந்நிய பெண்ணை விவாகம் செய்ய துணிந்த அவர், இப்பொழுது தன் தாய் தகப்பனுக்கு கூட சொல்லாமல் மறைத்து வைத்து காப்பாற்றிய தேவ பெலனின் ரகசியத்தை, ஒரு பெண் செய்யும் சாதாரண அலட்டலை பொறுத்துக் கொள்ள முடியாமல், அதை அவளுக்கு வெளிப்படுத்தினார். இங்கு அவர் நடந்ததைச் சொல்லாமல் விடுகதைக்கான விடையை மட்டும் சொன்னாலும், இந்த பலவீனமே பின்னாளில், அவருடைய பெலத்தின் ரகசியம் என்னவென்பதையும், இவ்வாறு வெறும் ஒரு பெண்ணின் சிநேகத்திற்காக வெளிப்படையாய் சொல்ல வைத்தது. அவர் இவ்வாறு விடுகதையை விடுவித்ததன் விளைவு, அவர் எந்த கனவோடு அந்த

பெண்ணை விவாகம் பண்ண நினைத்தாரோ, அது யாவும் சின்னாபின்னமாய் போய், இறுதியில் அவர் நேசித்த பெண்ணும் அவள் வீட்டாரும், அவளுடைய சொந்த ஜனங்களாலேயே கொல்லப்பட்டனர்.

தேவத் திட்டத்தின்படி பெலிஸ்தியரை பகைக்கவும், அவர்களை அழிக்கவும், இப்படிப்பட்ட காரியங்கள் அவர் வாழ்க்கையில் தேவனால் அனுமதிக்கப்பட்டது. **நியாயாதிபதிகள் 15:7,8** வசனங்களில் **"அப்பொழுது சிம்சோன் அவர்களை நோக்கி: நீங்கள் இப்படிச் செய்தபடியால் நான் உங்கள் கையிலே பழிவாங்கினாலொழிய இளைப்பாறேன் என்று சொல்லி, அவர்களைச் சின்னபின்னமாகச் சங்காரம்பண்ணி, பின்பு போய், ஏத்தாம் ஊர்க் கன்மலைச் சந்திலே குடியிருந்தான்."** இங்கு ஆண்டவர் சிம்சோன் வழி மாறி போனாலும், அதையும் தம் திட்டம் நிறைவேற பயன்படுத்தினார். இந்த சம்பவங்களின் தொடர்ச்சியாக, **நியாயாதிபதிகள் 15:11-17** வசனங்களில் **"அப்பொழுது யூதாவிலே மூவாயிரம்பேர் ஏத்தாம் ஊர்க் கன்மலைச் சந்திற்குப் போய்: பெலிஸ்தர் நம்மை ஆளுகிறார்கள் என்று தெரியாதா? பின்னை ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய் என்று சிம்சோனிடத்தில் சொன்னார்கள். அதற்கு அவன்: அவர்கள் எனக்குச் செய்தபடியே நானும் அவர்களுக்குச் செய்தேன் என்றான். அப்பொழுது அவர்கள்: உன்னைக் கட்டி, பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுக்க வந்திருக்கிறோம் என்றார்கள். அதற்குச் சிம்சோன்: நீங்களே என்மேல் விழுகிறதில்லை என்று எனக்கு ஆணையிடுங்கள் என்றான். அதற்கு அவர்கள்: நாங்கள் உன்னை இறுகக்கட்டி, அவர்கள் கையில் ஒப்புக்கொடுப்போமே அல்லாமல், உன்னைக் கொன்றுபோடமாட்டோம் என்று சொல்லி, இரண்டு புதுக் கயிறுகளாலே அவனைக் கட்டி, கன்மலையிலிருந்து கொண்டுபோனார்கள். அவன் லேகிவரைக்கும் வந்து சேர்ந்தபோது, பெலிஸ்தர் அவனுக்கு விரோதமாய் ஆரவாரம் பண்ணினார்கள்; அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்போலாகி, அவன் கட்டுகள் அவன் கைகளை விட்டு அறுந்துபோயிற்று. உடனே அவன் ஒரு கழுதையின் பச்சைத் தாடையெலும்பைக் கண்டு, தன் கையை நீட்டி அதை எடுத்து, அதினாலே ஆயிரம் பேரைக் கொன்றுபோட்டான். அப்பொழுது சிம்சோன்: கழுதையின்**

**தாடையெலும்பினால் குவியல் குவியலாகப் பட்டுக்கிடக்கிறார்கள், கழுதையின் தாடையெலும்பினால் ஆயிரம்பேரைக் கொன்றேன் என்றான். அப்படிச் சொல்லித் தீர்ந்தபின்பு, தன் கையில் இருந்த தாடையெலும்பை எறிந்துவிட்டு, அவ்விடத்திற்கு ராமாத்லேகி என்று பேரிட்டான்.“**

மேற்கண்ட வசனங்களில் மூலம், பெலிஸ்தியரின் கையில் இருந்து, இஸ்ரவேல் மக்களை விடுவிக்கும் இரட்சகனாய் சிம்சோனை, ஆண்டவர் தெரிந்து கொண்டார் என்பதை வெளிப்படுத்தினார். மேலும் **நியாயாதிபதிகள் 15:18,19** வசனங்களில் **“அவன் மிகவும் தாகமடைந்து, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: தேவரீர் உமது அடியேன் கையினால் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்க, இப்பொழுது நான் தாகத்தினால் செத்து, விருத்தசேதனம் இல்லாதவர்கள் கையிலே விழவேண்டுமோ என்றான். அப்பொழுது தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப்பண்ணினார்; அதிலிருந்து தண்ணீர் ஓடிவந்தது; அவன் குடித்தபோது அவன் உயிர் திரும்ப வந்தது, அவன் பிழைத்தான்; ஆனபடியால் அதற்கு எந்நக்கோரி என்று பேரிட்டான்; அது இந்நாள்வரையும் லேகியில் இருக்கிறது.“**. இங்கு தன் திட்டத்தை நிறைவேற்றிய சிம்சோனின் வேண்டுதலுக்கு ஆண்டவர் செவி கொடுத்து, அற்புதம் செய்தார். இங்கு நாம் முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டியது, **“உமது அடியேன் கையினால் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்க“** என்ற வார்த்தையானது, அவரைக் குறித்த தேவத்திட்டத்தை அவர் உணர்ந்து கொண்டது மாத்திரமன்றி, அதற்காக செயலாற்றவும் அவர் தன்னை அர்ப்பணித்ததை காணலாம். மேலும் தேவனோடு நேரடியாக பேசி, அவர் கரத்தின் மூலம் அற்புதத்தை பெற்றுக் கொள்ளும் அளவிற்கு தேவ உறவும் அவருக்கு கிடைத்தது. இதனால் இதற்கு அடுத்த வசனம் **நியாயாதிபதிகள் 15:20** கூறுகிறது **“அவன் பெலிஸ்தரின் நாட்களில் இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரித்தான்.“** என்று.

இப்படியாக ஆண்டவர் சிம்சோனின் வாழ்வில் பல்வேறு கிருபைகளை தந்து, அவரை குறித்த தேவ நோக்கத்தை வெளிப்படுத்தி, இஸ்ரவேலுக்கு இரட்சகனாகவும், நியாயாதிபதியாகவும் அவரை ஏற்படுத்தினார். ஒருவேளை அவர் இதை உணர்ந்து தன் வாழ்க்கையில் தேவ திட்டம் நிறைவேற, தன்

பிறப்பிற்கு முன்பாகவே கூறப்பட்ட காரியங்கள் தன் வாழ்வில் நிறைவேற அனுமதித்திருப் பாரானால், அவர் வாழ்க்கை மகிமையான பராக்கிரமம் நிறைந்த ஒன்றாக மாறியிருக்கும். ஆனால் அவரோ தனக்கு கொடுக்கப்பட்ட கிருபையை போக்கடித்தவராய் தன் வழியை இன்னும் கெடுத்துக்கொண்டார். இதை பற்றி நாம் தொடர்ந்து அடுத்த பாகத்தில் தியானிப்போமாக, ஆமென், அல்லேலூயா.